21st July 1964]

என்று விசேஷ அதிகாரிகளை நியமனம் செய்து இதை விரிவாக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவசரப்பட்டு, சென்ற வருஷமே எதிர்பார்த்தோம் இந்த வருஷமும் வரவில்லை என்றெல்லாம் நினைக்கக் கூடிய மனப்பான்மை கனம் சீமைச்சாமிக்கு மட்டு மின்றி, மற்ற அங்கத்தினர்களுக்கும் இருக்குமேயானால், நீர்ப் பாசன வேலைகள் பொருத்த மட்டில், நம் இராஜ்யத்திற்கு லாபமாக அமையாது.

வைகை நீர்த்தேக்கத்தின் கீழுள்ள ஆயக்கட்டு

* 513 **கேள்வி.—திரு. மா. இராசாங்கம்:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதி லளிப்பாரா—

வைகை அணை வாய்க்கால் நீரை திருமங்கலம் தாலுக்கா விக்ரமன்குளம் கண்மாயில் இருந்து முதலைக்குளம் பெரிய கண் மாய்க்குப் பாயவிடாததற்குக் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH: Mudalaikulam Periya kanmoi lies outside the Vaigai Reservoir Project ayacut. Hence it is not entitled to Periyar waters.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: சார், இந்த முதலைக்குளம் சம்மந்தமான திட்டம் வைகை கால்வாய் திட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து பிறகு கைவிடப்பட்டிருக்கிறது ஏன் என்று தெரியவில்லை. இதைச் சேர்க்க அமைச்சர் முயற்சி எடுப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இப்பொழுது கண்மாயைப் பற்றிய கேள்விக்கு, திட்டம் இல்லை என்று பதிலளித்தேன். அங்கத்தினர் சொல்வது பற்றி மறு பரிசிலனை செய்ய நியாயம் இருந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். தனிக் கேள்வி போட்டால், விசேஷமாகப் பரிசிலனை செய்து பதில் சொல்ல முடியும்.

கிராமத் தொண்டர் படை

* 581 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அன்று துவக்கிய கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ள தொண்டர்கள் எத்தனை பேர்?

(இ) தலைமைத் தொண்டர்கள் எத்தனை பேர்?

(உ) சூதாட்டம்; கள்ளக்கடத்தல்; சாராயம் காய்ச்சுதல்; கறுப்பு வியாபாரம் செய்வோர் போன்ற நாட்டின் தீய சக்திகளை களைவதற்கு வேண்டிய வேலைகளில் ஈடுபட இவர்களுக்கு அதிகாரம் வழங்க உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 1,472,533.

(இ) தலைமைத் தொண்டர்களின் எண்ணிக்கை 15,058.

(உ) இல்லை